1982 பிப்ரவரி 6]

ஊராட்சி எழுத்தர்கள் சங்க கோரிக்கைகள் மீது அரசு கொண்ட நடவடிக்கைகள்.

* வினா எண். 74—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஊராட்சி எழுத்தர்கள் சங்கம்-மாநில அமைப்பு, பாபநாசம், தஞ்சாவூர் மாவட்டம், அரசுக்கு 27–2–1981 தேதியிட்ட விண்ணப்பம் ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி, சொரணம் : தலைவரவர்களே, அந்த விவர அறிக்கையிலே எந்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று அத்தனை கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி பகுதி நேர எழுத்தர் 37.50 ரூபாயை வைத்துக்கொண்டு இந்த விலைவாசி ஏற்றத்தில் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? 2, 3 ஊராட்சிகளில் அவர் வேலை பார்த்தாலும் 100 ரூபாய்க்குமேல் வருமானம் வராது. ஆகவே, அரசாங்கம் மறுபரிசீலனை செய்து அவர்கள் சம்பளத்தை உயர்த்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, ஊராட்சிகளில் பணிபுரியும் பகுதிநேர எழுத்தர்களின் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, சம்பளத்தை உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

(முற்பகல் 10·00).

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி எழுத்தர்கள் சங்கம் முழு நேர வேலை தரும்படி 27–2–1981 அன்று அனுப்பி இருந்த கோரிக்கை மனுவின் மீது என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது ?

---

*544-545-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, விவர அறிக்கை அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூட குறைந்த பட்சக் கூலி 7 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த எழுத்தர்களுக்கு குறைந்தபட்சம் $37\frac{1}{2}$ ரூபாய்தான் கூலியாகக் கிடைக்கின்றது. ஆகவே அவர்களுக்கு குறைந்தபட்சம் 200 ரூபாய் மாதாந்திரக் கூலியாகக் கிடைக்கின்ற வகையிலே உத்தரவாதம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதை மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கான ஆலோசனைக் குழுக்கள்.

* வினா எண். 75— திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி மன்றங்களில் ஆலோசனைக் குழுக்களை செயல்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு ஏற்கனவே ஆலோசனைக்குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் எல்லாம் பெயர் அளவிலே தான் இருக்கின்றன. இந்தக் குழுக்களைக் கூட்ட வேண்டும் என்று நானும் பலமுறை அமைச்சரிடத்திலே முறையிட்டிருக்கிறேன். ஆனால் இது வரையில் இந்தக் குழுக்கள் கூட்டப்படுவதே கிடையாது. ஆகவே இவற்றைக் கூட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : : தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்ற ஆலோசனைக் குழுக்கள் ஒவ்வொரு மாதமும் கூடவேண்டும் என்றும் ஒவ்வொரு மாதமும் உறுப்பினர்கள்